# அக்டோபர் – 17 – புதன்

## புனித அந்தியோக்கியா இஞ்ஞாசியார்

**நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார் - திபா 1 : 6**

## முதல் வாசகம் : கலாத்தியர் 5 : 18 – 25

சகோதர சகோதரிகளே!நீங்கள் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டால் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கமாட்டீர்கள்.ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி,சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு,அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப்பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன்.ஆனால் தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை,கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும். இவையுள்ள இடத்தில் திருச்சட்டத்திற்கு இடமில்லை.கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள்.தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மைப் பின் தொடர்பவர் வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பர்.

## நற்செய்தி : லூக்கா 11 : 42 - 46

அக்காலத்தில் இயேசு கூறியது : “ஐயோ! பரிசேயரே உங்களுக்குக்கேடு! நீங்கள் புதினா,கறியிலை, மற்றும் கீரைச் செடிவகைகள் எல்லாவற்றிலும் பத்திலொரு பங்கைக் காணிக்கையாகப் படைக்கிறீர்கள். ஆனால் நீதியையும், கடவுளின் அன்பையும் பொருட்படுத்துவதில்லை. இவற்றைத்தான் கடைப்பிடித்திருக்க வேண்டும் ஆனால் அவற்றையும் விட்டுவிடலாகாது. ஐயோ! பரிசேயரே, உங்களுக்குக் கேடு! தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் சந்தை வெளிகளில் மக்கள் வணக்கம் செலுத்துவதையும் விரும்புகிறீர்களே. ஐயோ! உங்களுக்குக்கேடு! ஏனெனில் நீங்கள் அடையாளம் தெரியாத கல்லறைகள்போல் இருக்கிறீர்கள். மக்களும் கல்லறைகள் எனத்தெரியாமல் அவற்றின் மீது நடந்து போகிறார்கள். திருச்சட்ட அறிஞருள் ஒருவர் அவரைப் பார்த்து, “போதகரே, இவற்றைச் சொல்லி எங்களை இழிவுபடுத்துகிறீர்“ என்றார். அதற்கு அவர், “ஐயோ! திருச்சட்ட அறிஞரே, உங்களுக்கும் கேடு! ஏனென்றால் நீங்கள் தாங்கமுடியாத சுமைகளை மக்கள் மேல் சுமத்துகிறீர்கள் நீங்களோ அந்தச் சுமைகளை ஒருவிரலால் கூடத் தொடமாட்டீர்கள்.“ என்றார்.

**தியானம்:** யூதமக்களின் சமயவாழ்வையும், சமூகவாழ்வையும் வழிப்படுத்தியது “திருச்சட்டம்“. அது வெறும் சட்டத் தொகுப்பு அல்ல, மாறாக, ஒருவாழ்க்கை நெறி. மக்கள் அதை மகிழ்ச்சியோடும் நிறைவான உள்ளத்தோடும் கடைப்பிடிக்கவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். ஆனால் திருச்சட்டத்தை விளக்கிய “அறிஞர்கள்“ பலதுல்லியமான நுணுக்கங்களை அதில் புகுத்தினார்கள். எனவே, இயேசு இத்தகைய விளக்கங்களை “மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமையாகக் காண்கிறார் (லூக்கா 11:46). இவ்வாறு மக்களுடைய வாழ்க்கையைக் கடினமாக மாற்றிய திருச்சட்ட அறிஞர்கள் அந்த மக்களுக்கு உதவிபுரிவதற்கு மாறாக அவர்களுக்குக் கொடுமை தான் இழைத்தார்கள். ஒருவேளை அந்த திருச்சட்ட அறிஞர்கள் சட்டத்தைத் துல்லியமாகக் கடைப்பிடித்திருக்கலாம் என்றாலும் அவர்கள் சட்டத்திற்கு அளித்தவிளக்கம் மக்களுக்குத் துன்பத்தையே கொணர்ந்தது. கடவுள் காட்டுகின்றவழியில் நடந்து செல்வது மனிதருக்கு ஒரு சுகமான அனுபவமாக மாற வேண்டும். அந்த வழியில் நடப்பது எப்போதும் எளிதாக இல்லாமல் இருக்கலாம் ஏன், சிலவேளைகயில் நாம் தியாகம் செய்வதும் தேவையாகலாம். ஆனால் கடவுள் நமக்கு அளித்துள்ள நெறியைக் கடைப்பிடிப்பது நம் உள்ளத்திற்கு நிறைவையும் நம் வாழ்வுக்கு மகிழ்ச்சியையும் தருவதாக இருக்க வேண்டும். கவலைதோய்ந்த முகத்தோடு கடவுளின் நெறியில் நடப்பதற்குமாறாக, மகிழ்ச்சிகலந்த உணர்வுகளோடு அவரை அன்பு செய்து அவர் காட்டுகின்றவழியில் பயணம் செய்வதே நமக்கு அழகு.